# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர்சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 06.11.2020**

**முன்னிலை**

**திரு ரா.ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 12203/SCIC/2019**

திரு T. தங்கராஜ் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர் 'யு' பிரிவு
பதிவுத்துறை தலைவர் அலுவலகம் --
சென்னை பொதுஅதிகாரஅமைப்பு

## ஆணை

மனுதாரர் திரு T. தங்கராஜ் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 16.08.2019 தேதியிட்டு அனுப்பிய மனுவில், செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்யப்படுவது குறித்த தகவல்களை கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 25.09.2019 தேதியிட்டு மனுதாருக்கு பதில் வழங்கியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர் பிரிவு 19(1)-ன்கீழ் 16.10.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 14.11.2019 தேதியிட்டு மனுதாரருக்கு பதில் அனுப்பியுள்ளார். அதன்பின்னர் 02.12.2019 தேதியிட்டு பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால் 26/02/2020 மற்றும் 06/03/2020 ஆகிய தேதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வழக்கு மறுவிசாரணைக்காக பட்டியலிடப்பட்டிருந்தது. கொரோனா வைரஸ் நோயினால் பிறப்பிக்கப்பட்ட முழு ஊரடங்கு காரணமாக விசாரணை நடைபெறவில்லை.

3. அதன்பின்னர் இவ்வழக்கு இன்று (05.11.2020) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு அனைத்து தகவல்களைபும் வழங்கிவிட்டதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மனுதாரரும் தமக்கு பொதுத் தகவல்

அலுவலரிடமிருந்து தகவல்கள் வரப்பெற்றுள்ளன என்று ஒப்புகொண்டார். மேலும் பெறப்பட்ட தகவல்கள் தமக்கு மனநிறைவு அளிப்பதாகவும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் **வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12203/SCIC/2019</u>**
**பெறுநர்**
**<u>பொதுஅதிகாரஅமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர் 'யு' பிரிவு
பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
சென்னை

**<u>மனுதாரர்</u>**
திரு T. தங்கராஜ்
த/பெ வை. தங்கவேல்
க.எண்.24/1, மாணிக்கவாசகர் தெரு
பார்வதிபுரம், முசிறி அஞ்சல்
திருச்சி மாவட்டம்.

*Pc-ds-*